
# கிறிஸ்துவின் வசனம்

# Word Of Christ




ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

# இயேசுவின் மலைபிரசங்கம்

1. ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

2. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் ஆறுதலடைவார்கள்.

3. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.

4. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள்.

5. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

6. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

7. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புதித்ரர் என்னப்படுவார்கள்.

8. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.

மத்தேயு 5:3-10

৯

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRSIT

மரம் 4 ஜனவரி 1996 கனி 6

## எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்
### Rejoice evermore

அன்பான சகோதரனே, சகோதரியே உங்கள் வாழ்க்கையில் சந்தோஷமாயிருக்கிறீர்களா? அல்லது கவலையாயிருக்கிறீர்களா இந்த உலகத்தில் உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தைஜெயித்தேன் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுவதை பரிசுத்த வேதாகமத்தில் யோவான் 16:33 ல் வாசிக்கின்றோம். உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மீது வைத்து விடுங்கள். அப்பொழுது சமாதானத்தைப் பெற்றுக் கொள்வீர்கள். உலகம் கொடுக்கிற சந்தோஷத்தையும், சமாதானத்தையும் ஆண்டவர் இயேசு நமக்குத் தருவதாக சொல்லவில்லை. அதற்கு மாறாக உலகம் தரக்கூடாத சமாதானத்தை உங்களுக்குத் தருவேன் என்றார். இந்த சமாதானத்தை உங்கள் வாழ்க்கையில் பெற்றிருக்கிறீர்களா? இல்லையென்றால் இன்றே, இப்பொழுதே உங்களை ஆண்டவர் இயேசுக்கு ஒப்புக்கொடுத்து தேவனை நோக்கி ஜெபியுங்கள். உங்களை உண்டாக்கிய நம்முடைய தேவனாகிய கர்த்தர் நீங்கள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

இவ்வுலகில் ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகள் சந்தோஷமாயிருப்பதையே விரும்புகிறார்கள். இதை அனுதின வாழ்க்கையில் காண முடிகிறது. அதேவேளையில் தங்கள் குழந்தைகள் கவலைப்படுவதை அவர்கள் விரும்புவதில்லை. உலகத்திலுள்ள தகப்பனும், தாயும் தங்கள் பிள்ளைகள் மீது இவ்வளவு அக்கறை உள்ளவர்களாக இருக்கும்போது நம்முடைய பரம பிதா நம்மீது அதிக கரிசனையுள்ளவராக இருக்கிறார் என்பது அதிக நிச்சயம் அல்லவா! ஆம் பிரியமானவர்களே! என்ன பிரச்சனையாக

---

சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். மத்5:12

இருந்தாலும், எப்படிப்பட்ட வியாதியாக இருந்தாலும் நீங்கள் கவலைப்படாமல் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைக் காக்க வல்லவராக இருக்கிறார் இவ்வுலகில் பிறக்கும் போது என்ன கொண்டு வந்தோம்? இவ்வுலகை விட்டு போகும் போது எதை எடுத்துச் செல்ல போகிறோம்? உள்ளவைகள் போதுமென்று நினைத்து சந்தோஷமா யிருங்கள். நம்தேவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கையோடே காத்திருங்கள்.

தாவீது சங் 5:11ல் உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து எந்நாளும் கெம்பீரிப்பார்களாக; நீர் அவர்களைக் காப்பாற்றுவீர்; உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக என்கிறார். நாம் ஆண்டவரை முழு மனதுடன் நம்பும் போது நம்முடைய வாழ்க்கையில் சந்தோஷம் நிறைந்து காணப்படும், கெம்பீரசத்தம் எழும்பும், ஆண்டவரை விட்டு சற்று விலகும்போது, எவனை விழுங்களாமேவென்று கெர்ச்சிக்கிற சிங்கத்தைப் போல வகைதேடி சுற்றித் திரியும் பிசாசு நம்முடைய வாழ்க்கையில் உட்புகுந்து, அநேக பிரச்சனைகளையும், சந்தேகங் களையும், ஆண்டவருக்கு விரோதமான வார்த்தைகளையும் சொல்லி நம் தேவனை மறுதலிக்கச் செய்திடுவான். ஆகையால் நீங்கள் பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஒடிப் போவான்.

நமக்கு ஒர் நிலையான சந்தோஷம் உண்டு என்று 1 பேது 1:5,6 ல் வாசிக்கின்றோம். கடைசி காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தை கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்த சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும் துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்ச காலம் பல விதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்;

ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது யோவான் 6:63

என்கிறார். பிரிய நண்பரே! உங்கள் சந்தோஷம் குறையாதபடி இவைகளினாலே உங்களைத் தேற்றுங்கள். அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூருகிறீர்கள். இப்பொழுது அவரை தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூருகிறீர்கள். இப்படியே நிலைத்து எப்போதும் சந்தோஷமாயிருங்கள். கர்த்தர் உங்களுக்கு வேண்டிய பெலனையும் கொடுத்து உங்கள் சந்தோஷத்தை நிறைவாக்குவாராக

ஆமென்.

★ சபைச்செய்திகள்

1. டிசம்பர் 26, 27, 28 ஆகிய மூன்று நாட்களிலும் சுவிஷேசக் கூட்டம் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில் நடைபெற்றது. சகோ பி.ஆர். சாமி (வானொலி பேச்சாளர்) அவர்கள் தேவ செய்தியை அளித்தார் கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரு வாலிப சகோதரன் கிறிஸ்துவுக்குக்-கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்.

2. மேற்கண்ட நாட்களில் நடைபெற்ற ஊழியர்க்கான கருத்தரங்கில் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களிலிருந்து கிறிஸ்துவின் ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். இக்கருத்தரங்கை சகோ டக்ளஸ் அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார்.

3. டிசம்பர் 29-ம் தேதியில் கொடைக்கானலில் வேத வகுப்பு நடைபெற்றது. சிலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இவ்வகுப்புகளை சகோ. குணசேகரன் அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார். சகோ. பி ஆர். சாமி அவர்கள் போதித்தார்கள்.

4. பாண்டிச்சேரி பகுதியில் கிறிஸ்துவின் சபை ஊழியரான சகோ. செங்கோல்ராயன் அவர்களால் கடந்த 26-11-95 அன்று 6 இளம் வாலிபர்கள் கிறிஸ்துவுக்கு கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்றார்கள் 1. பவுல்ராஜ், 2. ஜான்சன், 3. ஜெயா, 4. அருளப்பா, 5. அலெக்சாண்டர், 6. இருதயராஜ், இவர்களுக்காக ஜெபியுங்கள்

சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளை-களாயிருக்கிறோம் கலா 4:28

★ டிசம்பர் மாத வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

1. மலர்க்கொடி ஸ்டீபன் - காளையார்குறிச்சி
2. ஜெபர்சன் ஜேக்கப் - ஐரேனிபுரம்
3. ஸ்டெல்லா - வத்தலக்குண்டு
4. சிறுமி அமுதா - ,,

★ டிசம்பர் மாத இதழின் விடைகள்

1. துக்கமாய் எபி 12:11
2. பொய்வார்த்தைகளை எரே 7:4
3. ஐயோ எரே 22:14
4. யூதர்கள் யோவா 9:22
5. இஸ்ரவேலரை ரோம 9:28
6. தேவனுடைய
7. சகோதரிகளாய்
8. உயிரோடேசெத்தவள்
9. பெண்ணொட்டகம்
10. எங்கும்.

★ இம்மாத வேத அறிவுப் போட்டி

1. உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன் என்றவன் யார்?.
2. நீ தேவனுடைய தூதனைப் போலஎன் பார்வைக்கு பிரியமானவன் என்று யார் யாரைப் பார்த்து சொல்வது?.
3. பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும்; தேவன் தமக்கு கீழ்ப்படிகிற வர்களுக்குத் தந்தருளின யாரும் சாட்சி என்றார்கள்.
4. தண்ணீரில்லாத குழியிலே அடைபட்டிருக்கிற உன்னுடையவர்களை நான் எதினாலே விடுதலை பண்ணுவேன் என்று கர்த்தர்செல்லுகிறார்?
5. சந்தோஷப்பட்டு களிகூருங்கள் பரலோகத்திலே உங்கள் பலன் எப்படியிருக்கும்?
6. விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது யாருக்கு உரைக்கப் பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்?
7. ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே என்ன செய்தாயிற்று?
8. சிலர் உங்களை கலகப்படுத்தி,யாருடைய சுவிசேஷத்தை புரட்ட மனதாயிக்கிறார்கள்?
9. நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே சுதந்தரமாகிய பலனை யாராலே பெறுவீர்கள்?
10. அக்கிரமக்காரனை கர்த்தர் எதனாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பன்னுவார்?

விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன்
வெளி 2:28

இதை உங்கள் நண்பர்களுக்கு கொடுங்கள்

மன அமைதி, நித்திய சந்தோஷம், பாவத்திலிருந்தும், தவறான உபதேசங்களிலிருந்தும் விடுதலையளிக்கவல்ல தேவனுடைய வசனத்தை (யாக் 3:17,18)

# "சத்திய வழி"

என்ற வானொலி நிகழ்ச்சியாக இலங்கை ஒலிபரப்பு கூட்டு ஸ்தாபன ஆசிய சேவையில் 25, 49, 41, ஆகிய அலை வரிசைகளில் ஒவ்வொரு வாரமும்

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய் மாலை | | 5-30 — 5-45 | செய்தி P.R. சாமி |
| வியாழன் | ,, | 6-45 — 7-00 | |
| ஞாயிறு | ,, | 6-45 — 7-00 | |

ஆகிய நாட்களில் நீங்கள் கேட்டு மகிழுங்கள். உங்கள் நண்பர்களையும் கேட்கச்சொல்லுங்கள்.

"நான சொல்கிறதிலும் அதிகமாய் செய்வீரென்று அறிந்து இதற்கு நீர் இணங்குவீரென்று நிச்சயத்து (இதை) உமக்கு எழுதியிருக்கிறேன்." (பிலேமோன் வச 21)

மேலும் உங்கள் இல்லங்களிலே அமைதியான சூழலில் வேத வசனத்தைப் பகுத்துப்படிக்க ஓர் அரிய வாய்ப்பு.

"தேவனுடைய வார்த்தை உண்மையுள்ளது. இவைகளே நன்மையும் மனுஷருக்கு பிரயோஜனமுமானவைகள்." தீத்து 3 : 8

பெரியோர், சிறியோர், ஆண், பெண் இருபாலரும் படிக்கலாம், எங்களுக்கு எழுதுங்கள்.

★ மேலும் புத்தகங்கள் அனுப்புங்கள்

★ எங்களுக்காக ஜெபியுங்கள்.

★ தபால் முறை வேதபாடங்களை அனுப்புங்கள்

★ உங்களுடன் எங்கள் இல்லத்தில் / நான் வேத ஆராய்ச்சியில் பங்கு பெற விரும்புகிறேன்.

தேவையானவற்றில் "ரைட்" குறியிடவும்.

பெயர் ______________________________ ____________

முகவரி ______________________________ ____________

தபால் குறியீட்டு எண் ________________

"சத்திய வழி"
தபால்பெட்டி எண், 8405
பெங்களூர் - 560084, தென் இந்தியா

PRINTED MATTER

To

If undelivered please return to:

**THE EDITOR**

WORD OF CHRIST

Post Office Box No. 7

Batlagundu 624 202

S. India